UNIVERSITY OF PERADENIYA

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය ) පරීක්ෂණය 100 මට්ටම - 2024

இளங்கலைமாணிப் பட்ட பரீட்சை (வெளிவாரி-புதிய பாடத்திட்டம்) 100 வது தேர்ச்சி மட்டம் -

செப்டெம்பர் 2024

Bachelor of Arts (External - New Syllabus) Examination 100 Level – September – 2024

# தமிழ் எழுத்தாற்றல்

# WRITING SKILLS IN TAMIL

## SUPE 106

மூன்று (03) மணித்தியாலங்கள்

Time three **(03)** Hours.

எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்.

Marks will be deducted for illegible hand writing.

——05- வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

Answer -----05- questions only.

இந்த வினாப்பத்திரத்தில்- 07 --வினாக்கள் உள்ளன.

There are ----07--- questions in the question paper.

---

**பகுதி I** இல் சகல வினாக்களுக்கும் **பகுதி II மற்றும் பகுதி III** இலிருந்து **தலா ஒரு வினாவுமாகத்** தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து (05)** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

**01. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பில் 300 – 350 சொற்களில் கட்டுரை எழுதுக.**

அ) இலங்கையின் பொருளாதார மீளெழுச்சி : சாத்தியங்களும் சவால்களும்

ஆ) செயற்கை நுண்ணறிவின் சாதகங்களும் பாதகங்களும்

இ) பாரம்பரிய உணவும் ஆரோக்கியமும்

ஈ) சிறுவர் துஷ்பிரயோகம் : விழிப்புணர்வும் பாதுகாப்பும்

உ) இனியொரு விதி செய்வோம்

**02. பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களுக்குள் சுருக்கி எழுதுக.**

பண்டைக் காலத்தில் மனிதன் விலங்குகளின் வடிவங்களைச் சித்திரமாக வரைந்தது ஏன்? அழகுணர்ச்சியாலா? அப்படியானால் மலை, கடல், மரம், சூரியன் போன்ற பொருள்களை ஏன் அவன் வரையவில்லை? அழகுணர்ச்சியில் காண்டாமிருகம், யானை, புலி முதலியவைதானா புலனாக வேண்டும்?

மிகப் பழமையான சித்திரங்கள் மனிதனது ஆரம்பக்கலை முயற்சிகள். அவை, அவனது சிந்தனையில் எப்பொழுதும் தோன்றிக் கொண்டிருக்கும் வடிவங்கள். அவனுக்கும் அவற்றிற்கும் உள்ள தொடர்பை அவை காட்டுகின்றன. தற்கால வேட்டைக்குழு மக்கள் ஒரு விலங்கு, செடி அல்லது வேறோர் ஜடப்பொருளோடு தொடர்பு இருப்பதாக நம்புகிறார்கள். இவற்றைத் தமது குலத்தைத் தோற்றுவித்தவையாக எண்ணுகிறார்கள். இத்தகைய தொடர்பை நம்பும் குழுக்களைக் குலக்குறி மக்கள் என்று மானிடவியலார் அழைக்கிறார்கள். தற்கால இனக்குழு மக்கள் அத்தொடர்புகளைப் பற்றிய பண்டைய நம்பிக்கையை மறந்து விட்டாலும், அக்குலக்குறிகளைப் பற்றிப் பலப்பல நம்பிக்கை உடையவர்களாக இருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவிலுள்ள அபார்ஜனிகளிடமும் அமெரிக்க சிவப்பு இந்தியரிடமும் ஆப்பிரிக்க நீக்ரோவரிடமும் இந்திய இனக்குழு மக்கள் தொகுதியினரிடமும் இந்த நம்பிக்கைகள் பரவலாக உள்ளன.

குலக்குறியுடைய இனக்குழு மக்கள் நாகரிகத்தின் துவக்க நிலையில் இருக்கிறார்கள். வேட்டையாடும் இனக்குழு மக்களுக்குப் போதுமான உணவு கிடைப்பதில்லை. அவர்களிடம் வலுவற்ற கற்கருவிகளே இருந்தன. உலோகம் கண்டுபிடிக்கப்படவில்லை. இவர்களது வாழ்க்கையில் விலங்குகள் முக்கியத்துவம் பெற்றதில் வியப்பில்லை. ஆனால், ஏன் காண்டாமிருகம், புலி, யானை போன்ற உண்ணத்தகாத விலங்குகளுக்கு அவர்கள் முக்கியத்துவம் அளித்தார்கள்? அவை ஆற்றல் மிக்க விலங்குகள். அவற்றோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டால் தங்களுடைய சக்தி மிகுதிப்படும் என்று அவர்கள் நம்பினார்கள். எனவே, தமது ஆற்றலைப் பெருக்கிக் கொள்ளவே, இவற்றைக் குலக்குறிகளாகக் கொண்டு இவற்றை மகிழ்விக்கப் பல சடங்குகளைச் செய்தார்கள். இச்செயல்களால் அவற்றின் ஆற்றலைத் தங்களுக்கு அளிக்கும் என நம்பினார்கள். மீனைப்போல் தங்கள் குலம் பெருகவேண்டும் என்ற விருப்பத்தால் மீனைக் குலக்குறியாகக் கொண்டார்கள்.

03. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

உலக இலக்கிய வரலாற்றைப் படிக்கும்பொழுது, உரைநடையானது காலத்தாற் பிந்தியதென்பது தெளிவாகின்றது. எம்மொழியிலும் பண்டை இலக்கியங்கள் செய்யுள் வடிவிலேயே அமைந்துள்ளன. அவற்றுள்ளும் மிகப் பழமையானவை வாய்மொழி இலக்கியமாகவே இருந்தன. பல நூற்றாண்டுக் காலத்தின் பின்னரே மெல்ல மெல்ல உரைநடை தோன்றிற்று. அவ்வாறு காலத்தாற் பிந்தித் தோன்றும் உரைநடையும் ஆற்றல்மிக்க சாதனமாக அமைவது சில நூற்றாண்டுகளுக்கு முன்னர்தான். பழங்காலத்திலே, கடவுளரையும் மனிதரையும் போற்றி, அவர்தம் பிறப்பு, போர், காதல், இறப்பு முதலியவற்றை விவரித்துக் கவிதையே யாத்தனர். தொடர்ச்சியாக இந்நிலை நீடித்ததன் விளைவாகக் **'கவிதையே கலையின் அரசி'** என்னும் மொழியும் வழங்குவதாயிற்று. கவிதை தொன்று தொட்டே சிறப்புற்று விளங்குவதற்குச் சில காரணங்கள் இருந்தன. புராதன சமூகங்களில் நிலவிய கூட்டு வாழ்க்கை இவற்றுள் தலையானது. மக்கள் ஒருமித்துக் கூடியே இயற்கையை எதிர்த்துநின்று போராடினர்; கருவிகள் செம்மையுறாத அக்காலத்தில் கூட்டுச்சேர்ந்த மனித சக்தியின் வலிமையாலேயே வாழ முடிந்தது. கூட்டாக வேலை செய்யும் பொழுது உடலசைவின் ஒத்திசைக்கியைந்த பாடல்கள் தோன்றின. இவற்றைத் தொழிற்பாடல்கள் (Labour Songs) என்று கூறுவர். ஏற்றநீர்ப்பாட்டு, வட்டமிட்டுப் பெண்கள் கொட்டியிசைத்திடுமோர் கூட்டமுதற்பாட்டு என்றெல்லாம் பாரதியார் வருணிப்பவை இப்புராதனத் தொழிற்பாடலில் வழிவருவனவே. தாம் செய்யும் தொழிலுக்கு உதவியாகவும் இயற்கையை வேண்டியும் ஏவல் கொண்டு அடக்கியாள்வதற்கு ஏதுவாகவும் அவர்கள் நடத்திய சடங்குகளும் கிரியைகளும் பல. அவற்றில் உச்சாடனஞ் செய்யப்பட்ட மந்திரங்கள் கவிதையின் மூலமாகும். இது காரணமாகக் கவிவாக்கு மந்திரசக்தி மிக்கதாகவும் நம்பப்பட்டது.

பழங்காலத்திலே இசைபாடவும் வசைபாடவும் ஏற்றவராகக் கவிஞர்கள் கொள்ளப்பட்டதற்கு அவர் வாக்கிற்கு இருந்த மதிப்பே காரணம். கவிஞரே கணியராகவும் அறிவராகவும் போற்றப்பட்டனர். கூட்டு வாழ்க்கை நடத்திய சமுதாயத்திலே கவிஞர் காலக் கிரமத்தில் தனிச் சிறப்புடையவராகக் கருதப்படினும், மக்கள் வாழ்க்கையில் முற்கூறிய இரு காரணங்களினால் கவிதை மக்களின் பொதுச்

சொத்தாக விளங்கியது. இது மானிடவியலார் கூறுஞ் செய்தி. இத்தகைய சூழ்நிலையிலே கவிதை கூட்டுமொழியின் வெளிப்பாடாகவும் பொதுமக்களின் உணர்ச்சி வெளிப்பாட்டின் வடிவமாகவும் அமைந்தது.

உதாரணமாக, "ஆடுவோமே, பள்ளுப்பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்" என்று பாரதி உளப்பாட்டுத் தன்மைப் பன்மையிற் பாடுகையில் அது பொதுமக்களை முன்னிலைப்படுத்தி அவர்தம் உணர்ச்சி வெளிப்பாட்டின் வடிவமாகவும் அமைவதைக் கவனிக்கலாம். இதற்காகவே மந்திரச் சொல்லின்பம் வேண்டும் என்றான் பாரதி. கவிதையின் இப்பண்பு நினைவிருத்தல் நன்று. ஏனெனில் கவிதைக்கு நேர்மாறாக, உரைநடையிலக்கியமானது தனிப்பட்டவரின் கூற்றாகவும் உணர்ச்சி வெளிப்பாடாகவும் அமைந்தது.

மொழி வரலாற்றிலே உரைநடை முதன் முதலாகத் தலை நிமிர்த்திய காலத்திலும் தயக்கத்துடனேயே தன்னைக் காட்டிக் கொள்கிறது. மனிதனது சிந்தனையும் உணர்வும் உருவாக்கிய பல துறைப்பட்ட ஆக்கங்களும் செய்யுள் வடிவிலே இருந்தமையால், உரைநடை அக்காலத்திலே "சில்லறை" நோக்கங்களுக்காவே பயன்பட்டது. கொடுக்கல் வாங்கல், அரசப் பிரகடனங்கள், சமூக விஞ்ஞாபனங்கள், கல்வெட்டுக்கள் முதலிய 'நாளாந்த' அலுவல்களுக்கு அது சிலாசாசன வடிவிலும், செப்பேடுகளிலும், திருமுக ஓலை வடிவிலும், வாய்மொழியாகவும் பயன்படுத்தப்பட்டது. இது உலகின் பல மொழிகளுக்கும் உடன்பாடான உண்மையாகும்.

01. இவ்வுரைப்பகுதியின் பிரதான கருத்தினை விளக்குக.
02. தொழிற்பாடல்கள் என்றால் என்ன?
03. ‘கவிதையே கலையின் அரசி’ என்ற வழக்குத் தோன்றியமைக்கான காரணம் யாது?
04. உரைநடையின் தொடக்ககாலப் பயன்பாட்டினை விளக்குக.
05. கவிதைக்கும் உரைநடை இலக்கியத்திற்கும் இடையிலான பிரதான வேறுபாட்டைத் தருக.

## பகுதி II

**04. பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தக்குறியீடுகளை இட்டு, வாக்கியங்களை மீள எழுதுக.**

1. ஆளுங்கட்சி எதிர்கட்சி ஆகியன இம்முறை தோல்வியடைந்தன
2. போகவேண்டாம் போகவேண்டாம் என்று பலமுறை சொல்லியும் அவன் கேட்கவில்லை
3. வேலுப்பிள்ளை ஆ தமிழ்த்துறை பேராதனைப் பல்கலைக்கழகம் பேராதனை
4. அவன் வழமைக்கு மாறாக நடந்துகொண்டான் இல்லையா
5. அவனுக்கு வேலை கிடைத்ததும் எல்லோரும் கேட்ட கேள்வி எப்போது திருமணம்
6. சைமன் காசிச்செட்டி வெளியிட்ட தமிழ்ப் புலவர் சரிதமான தமிழ் புளுட்டாக் Tamil Plutarch இலக்கிய வரலாற்றுத் துறைக்கு வித்திட்டது
7. வெற்றியாளர்கள் சுல்பிகா குமார் ஸ்டீபன்
8. தே ம ச கட்சியின் பொதுக்கூட்டம் நாளை இடம்பெறும்
9. நாட்டின் பொருளாதார நெருக்கடியால் கல்வி நடவடிக்கைகள் பாதிப்புற்றன மாணவர்களின் வருகை குறைந்தது பெறுபேறுகள் வீழ்ச்சியடைந்தன
10. திருமதி வசந்தா நாளை வருகிறாரா நாளை மறுதினம் வருகிறாரா

**05. பின்வரும் வாக்கியங்களில் காணப்படும் வழுக்களையும் மயக்கங்களையும் சுட்டிக்காட்டி, வாக்கியங்களைத் திருத்தி எழுதுக.**

1. பாடுவதும் ஆடுவதும் அவனுக்கு விருப்பமானது.
2. அப்துல்லாவும் நசீரும் பாடசாலைக்குச் சென்றோம்.
3. நான் கோப்பியோ அல்லது தேநீரோ அருந்துவதில்லை.
4. பெட்டியிலிருந்த ஒவ்வொரு பழங்களும் கனிந்திருந்தது.
5. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆங்கிலக் கல்வியும் நவநாகரிக மோகமும் பரவலாக்கம் பெற்றது
6. எல்லாப் பிள்ளையும் அழகாக ஆடியது.
7. இலங்கையில் மோசமான வைத்தியர் பற்றாக்குறை நிலவுகிறது.

8. குமரவேல் அவர்கள் முன்னாள் மலைமகள் வித்தியாலயத்தின் அதிபர் நேற்று காலமானார்.

9. கிராமங்களைவிட நகரங்களில் சனத்தொகை அடர்த்தி அதிகரித்து வருகின்றன.

10. நமது கவிஞர்களின் ஆக்கங்களில் பாரதியின் தேசியம் குறித்த கருத்துக்களும் சமூக சீர்திருத்த ஈடுபாடு, எளிமையான வடிவம் ஆகியன செல்வாக்குப் பெற்றுள்ளன.

## பகுதி III

**06.** உமது பிராந்தியத்தில் புதிதாகத் திறக்கப்படவுள்ள மதுபானசாலைக்கான அனுமதிப்பத்திரத்தை ரத்து செய்யக்கோரி, மதுவரித் திணைக்களப் பணிப்பாளருக்கு 150 சொற்களுக்குள் கடிதமொன்று எழுதுக.

**07.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினுக்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

அ. மொழிக் கல்வியின் முக்கியத்துவம்

ஆ. சொல்லும் பொருளும்

இ. திணைவழு

ஈ. வெகுசன ஊடகங்களில் தமிழ்மொழி